1971 டிசம்பர் 13]

(அ) நீலகிரி மாவட்டம், நெல்லியாளம் பஞ்சாயத்து பந்தலூரிலுள்ள ஆதிவாசிகளுக்கு விவசாய நிலங்கள் ஏதேனும் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்கள் அந்த ஒதுக்கப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்கின்றனர் ?

(உ) இல்லை எனில், காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) 94 ஆதிவாசிகள்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கு. அ. பொம்மன் :** பேரவைத் தலைவரவர்களே, ஆதிவாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை நிலச்சுவான்தார்கள் பறிமுதல் செய்து வருகிறார்கள். ஆகவே, அதை அரசு பரிசீலித்து. உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படி எந்த இடத்தில் நடைபெறுகிறது என்று தெரிவித்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

### பென்னலூர்ப்பேட்டைத் துணைவட்ட அலுவலகம்

*** 318 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்திற்கும் துணை பதிவாளர் அலுவலகத்திற்கும் கட்டடம் கட்ட ஊத்துக்கோட்டையில் நிலம் பெற வருவாய் வாரியம் பிரேரேபித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அப்படி வருவாய் வாரியம் அனுப்பியிருக்கும் செயற்குறிப்பை விரைவாக ஏற்று அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு, இருக்கின்ற நெறிசலில் ஊத்துக்கோட்டை துணை வட்டத்திற்கு உரிய அலுவலகத்திற்கு வாடகைக்குக் கூட இடம் கிடைக்காமல் இருக்கும் நிலைமையில், விரைவில் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.